தொலைபேசி 23411 விலை. சதம் 10

# சுதந்திரன்

SUTANTIRAN

வ. ஆ. 2001, வைகாசி 16 உ சனி (30-5-70) ற. அவ்வல் பிறை 23 —புத்தகம் 24 இதழ் 51


தினபதியாருக்கு காணிக்கை...

பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் மகத்தான

வெற்றி!



மக்கள் சமுத்திரத்தில் பெரியவர் செல்வா!



# 'ஆண்டவனே எங்களுக்கு வழி காட்ட வேண்டும்'

## புதிய அரசியல் நிலைகுறித்து சா. ஜே. வே. கருத்து; தமிழரசு தனிக் குழுவாக நாடாளுமன்றத்தில் இயங்கும்!

**நவத்தின் பொன் மொழி**

ஊர்காவற்றுறை மக்கள் கொள்ளிவைத்து விட்டார்கள்'

—(இறந்து போன சு. கழகத்தின் தலைவர் வி. நவரத்தினம் 27-5-70ல் தேர்தல் முடிவுதெரிவிக்கப்பட்டதும் கூறியது வீரகேசரி 29-5.70)

(நமது நிருபர்)

இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றத்தில் தமிழினத்தின் விடுதலைப் பெரும் படையாம் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் எதிர்க் கட்சியில் தனியொரு கொரடாவின் கீழ் தனிக் குழுவாக இயங்க இருக்கிறார்கள். எதிர்பாராத வகையில் எண்ணிக்கையில் மிக அதிகமான பெரும்பான்மையைக் கொண்ட தனிச் சிங்கள அரசாங்கம் ஒன்று மீண்டும் இந்நாட்டில் தலைதூக்கியிருக்கிறது. இந்த அரசாங்கம் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமானால் அதைத்தடுத்து நிறுத்த பாராளுமன்றத்தில் மட்டும் காரியமாற்றினால்போதாது; பாராளுமன்றத்துக்கு வெளியிலும் 1965க்கு முன்பு போராடியது போல பெரும் தியாகங்களைச் செய்து கடுமையான உரிமைப்போராட்டங்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தங்கள் இனி தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படலாம்.

கட்சியின் எதிர்காலத் திட்டங்களை வகுக்க கட்சியின் செயற்குழு இம்மாதம் 6ந் திகதி கொழும்பில் கூடுகிறது.

**பெரியவர் கருத்து**

மிகவும் கஷ்டமான காலத்தை தமிழ் மக்கள் எதிர் நோக்கவேண்டியுள்ளது. இந்தக் கட்டத்தில் கடவுள் தான் எங்களுக்குத் துணை புரிய வேண்டும். இம்முறையும் தமிழ் மக்கள் அதிகமான உறுப்பினர்களைத் தமிழரசுக் கட்சியிலிருந்தே தெரிவு செய்து தங்களை வழி நடத்தும் பொறுப்பினை எம்மிடமேயே ஒப்படைத்துள்ளனர். எனவே எவ்வளவு தியாகங்களை செய்ய நேரிடினும், தமிழரசுக் கட்சி தொடர்ந்து தமிழினத்தின் உரிமைகளுக்காக போராடத்தயாராக உள்ளது'

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் நிதானமான குரலில் சுதந்திரன் யாழ். நிருபரிடம் தெரிவித்தார்.

**நாகா கருத்து**

இரும்பு மனிதர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் கூறியதாவது:

(2 ம் பக்கம் பார்க்க)

## தமிழரசை எதிர்த்தவர்கள் படுதோல்வி! சமஷ்டியை மக்கள் ஏற்கின்றனர்!

சுதந்திர ஈழத்தின் ஏழாவது பொதுத்தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளே தம்து கொள்கை என நிரூபித்திருக்கின்றனர். தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை எதிர்த்தவர்களெல்லாம் தூக்கி எறியப்பட்டிருக்கின்றார்கள்.

### ஆர் ஜி., ஜீ. ஜீ., நவம், மு. சிவா ஆகியோர் முற்றாக நிராகரிக்கப்பட்டனர்

தமிழரசுக் கட்சியைத் திட்டுவதே தொழிலாகக் கொண்ட ஆர். ஜி. சேனநாயக்காபோன்ற வகுப்புவாதிகளெல்லாம் இருந்த இடம் தெரியாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆர். ஜி.க்குக் கட்டுப்பணமே கிடைக்காமற்போனது குறிப்பிடத்தக்கது.

(4-ம் பக்கம் பார்க்க)

## காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ப்பத்திரங்களில்லை

(நமது நிருபர்)

காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் விண்ணப்பப் பத்திரங்கள் தமிழிலில்லையாம். ஆனால் தமிழ் மொழிச் சட்டத்தின்படி தமிழிலும் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஆங்கிலத்திலும சிங்களத்திலும் மட்டுமே இருக்கின்றன.

இம்மொழிகள் தெரியாத ஒருவர் தமிழில் நிரப்புவேன் என்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முடியாது என்கின்றனராம்.

ஏனென்றால் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் தமிழ் விண்ணப்பங்களைக் கவனிக்க தமிழர்களோ—தமிழ்மொழி பெயர்ப்பாளர்களோ கூட இல்லையாம்.

பணம் கட்டுபவர்களுக்குத் தமது சொந்த மொழியிலேயே பத்திரங்கள் கிடைக்காதது அநியாயமல்லவா?

சட்டம் இடமளிக்கும் போது ஏன் தமிழில் பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை.

(2-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வாழ் தமிழ் பேசும்மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## மக்கள் சக்தியின் மகத்தான வெற்றி

மே 27ல் நடந்து முடிந்த இலங்கையின் ஏழாவது பொதுத் தேர்தலில் மீண்டும் ஓர் அமைதிப் புரட்சி நடந்து முடிந்திருக்கிறது, குறுகிய, பிற்போக்குவாத, முதலாளித்துவ யூ. என். பியை இந்நாட்டு மக்கள் ஆழக்குழி தோண்டிப் புதைத்து விட்டனர். பச்சை வகுப்பு வாதம் பேசி, தமிழ் மக்கள்மீது பகைமையையும் வெறுப்பையும் வளர்த்து வந்த ஆர். ஜி. சேனநாயக்காவின் சிங்கள மகாஜன கட்சியையும் இருந்த இடம் தெரியாமல் அழித்தொழித்து விட்டார்கள் சிங்களப் பொதுமக்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு இந்நாட்டுச் சாதாரண, நடுத்தர மக்கள் பெருவெற்றியீட்டிக் கொடுத்துள்ளனர். திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நாட்டின் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்றிருக்கிறார்; அவருக்கு இந்நாட்டு தமிழ் பேசும் மக்களின் சார்பில் நமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இடதுசாரிக் கூட்டணி இவ்வளவு பெருவாரியாக வெற்றி பெற்றதென்றால் அதற்கு ஒரே காரணம், நாட்டில் விலைவாசி ஏற்றத்தாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், மற்றும் வாழ்க்கைப் பிரச்சினைகளாலும் பொது மக்கள் யூ. என். பி. மீது கொண்டிருந்த ஏமாற்றமும் குமுறலும்தான். இதன் விளைவாகத்தான் யூ. என். பி. அமைச்சர்கள் பன்னிரண்டு பேரை மண் கவ்வச் செய்து பாரதூரமான படுதோல்வியை யூ. என். பிக்கு அளித்து கூட்டணியை ஆட்சி பீடமேற்றியுள்ளனர் பொதுமக்கள்.

யூ. என். பி. ஆட்சியின் கீழ் தாம் நாளாந்தம் அனுபவித்துவரும் கொடுமைகளும் கஷ்டங்களும் கூட்டணி ஆட்சியின் கீழ் தீராதா என்ற ஒரு ஆசையில்—நம்பிக்கையில்தான் பொது மக்கள் கூட்டணியை ஆட்சி பீடமேற்றியிருக்கிறார்கள். எனவே ஆட்சிக் கடிவாளத்தை கையில் பிடித்துள்ள கூட்டணியினர் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்புக்கள் மிகவும் பாரதூரமானவை. ஆட்சிக்கு எக்கச்சக்கமான பெரும்பான்மையுடன் வந்துவிட்டோம் என்ற செருக்கில்—கூட்டணியினர் தாம் நினைத்த நினைத்தபடி அட்சிக் குதிரையை செலுத்துவார்களானால், குதிரையில் இன்று ஏற்றியுள்ள அதே மக்களே அதிலிருந்து இறக்கிடவும் பின் நிற்க மாட்டார்கள் என்பதை கூட்டணியினர் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கூட்டணியினர் வெற்றிபெற்றதற்கான மற்றோர் இரகசியத்தையும் நாம் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்; அதுதான் தமிழ் பேசும் மக்கள் யூ. என். பிக்கு போட்ட சாபமாகும். 1965ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய திரு. டட்லி சேனநாயகா, தாம் எழுதிக்கொடுத்த ஒப்பந்தத்தை மீறி நன்றிகொன்று ஆணவத்துடன் தமிழரசுத் தலைவரை வீழ்த்துவேன் என்று அரற்றியதைக் கண்டு தமிழ் மக்கள் கொதிப்படைந்திருந்தார்கள். எந் நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய் நன்றிகொன்ற மகற்கு—என்ற வள்ளுவன் வாக்குப்படி செய் நன்றிகொன்ற யூ. என். பிக்கு இத்தேர்தலில் தமிழ் மக்கள் சரியான பாடத்தைப் புகட்டி விட்டார்கள்.

ஆகவே புதிய கூட்டணி ஆட்சி, இந்நாட்டுத் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவுடனேயே ஆட்சிபீடம் ஏற்றப்பட்டிருக்கிறதே தவிர தனியே சிங்கள மக்களால் மட்டும் அல்ல. இந்த அடிப்படை உண்மையை மறந்து சிங்கள இனவெறிபிடித்து கூட்டணி அரசு செயற்படுமானால், எவ்வளவு பலம் பொருந்திய அரசாக இருந்தாலும் இந்த அரசாங்கம் நாட்டில் நிம்மதியாக ஆள முடியாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஈழத் தமிழகத்தைப் பொறுத்தவரை — தமிழரசுக்கட்சியை இப்போதுத் தேர்தலில் அழித்தொழித்து—தமிழினத்தின் விடுதலை உணர்ச்சியை மழுங்கடிக்கச் செய்வதில்—பல்வேறு சக்திகள் கூட்டாக உழைத்தன. பணக் குவியல்கள் கொட்டப்பட்டன. மத அரக்கன் ஏவிவிடப்பட்டான். நாள்தோறும் பொய்ப் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன.

இப்படி எத்தனையோ தில்லுமுல்லுகள் நடந்தும் தமிழ் மக்கள் வழிதவறிப் போய்விடவில்லை.— விடுதலைப் பாதையைவிட்டு விலகிவிடவில்லை. மீண்டும் 13 பேருடன் தமிழரசுக்கட்சியையே தமது தனிப்பெரும் கட்சியாகத் தெரிவு செய்து தமக்கு வழி காட்டும் பொறுப்பை தமிழரசுத் தந்தையிடமே ஒப்படைத்துள்ளனர். இந்தப்போதுத் தேர்தலில் கட்சிக்கு எதிராக கச்சைகட்டிக்கொண்டு மாற்றார் செய்த சதிவேலைகளுடன் ஒப்பிடும்போது தமிழரசுக்கட்சியின் இவ் வெற்றி சாதாரண ஒரு வெற்றியல்ல: மகத்தான வெற்றியாகும்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம், தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளரும் மாஜி அமைச்சரபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம், வவுனியா முன்னாள் உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் சி. சுந்தரலிங்கம் ஆகிய நால்வரையும் தோல்வியடையச்செய்தது—ஒற்றையாட்சிக்கு, இனத்துரோகத்துக்கு பிரதேச மதவெறிக்கு சுக்குநூறாக வீழ்ந்த மரண அடியாகும்.

தமிழரசுக்கட்சியின் எதிர்காலத் திட்டமென்ன? கட்சி எப்படிச் செயற்பட வேண்டும் என்பதையெல்லாம் கட்சியின் [illegible] விரைவில் கூடி முடிவு செய்யவிருக்கிறது. இது பற்றி நாமும் நமது கருத்தை பின்னர் தெரிவிப்போம்.

நடைபெற்ற பொதுத்தேர்தலில் மக்கள் சக்தி வென்றுவிட்டது; தென்னிலங்கையில் இடதுசாரிக் கூட்டணி உருவிலும் வடக்கு கிழக்கில் தமிழரசுக்கட்சியின் வடிவத்திலும் மக்கள் சக்தி மாபெரும் வெற்றியீட்டிவிட்டது.

சமஷ்டிப் பாதையில்

# பெல்ஜியமும் செல்கிறது

140 வருடகாலமாக ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் ஆளப்பட்டு வந்த பெல்ஜியம் இன்று நாட்டின் இரு பெரும் இனத்தவராகிய பிரான்ஸ் மொழி பேசும் இனத்தவருக்கும், பிளமிஸ் (Flamish) மொழி பேசும் இனத்தவர்க்கும் இடையே நீண்ட காலமாக ஏற்பட்டுள்ள குமுறலை தீர்க்குமுகமாக சமஷ்டி ஆட்சியமைப்புக் கூடாக நடைபோட முதற்கதவைத் திறந்துள்ளது.

பெல்ஜிய பிரதமராகிய கஸ்டன் எயஸ்கென்ஸ் இப்பொழுது பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள திட்டம் பெல்ஜிய நாடு, நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதை அங்கீகரிக்கின்றது.

பிரான்ஸ் மொழியினர் பெருவாரியாக வசிக்கும் தென் பகுதி வாலொனியா [Wallonia]

டச்சு மொழியின் ஒரு பிரிவான பிளமிஸ் மொழியினர் வதியும் பிளண்டர்ஸ் [Flanders] பகுதி.

தலை நகராகிய பிரஸல்ஸ்-பலரும்-பற்பல இனத்தரும் வாழும் பகுதி.

ஜெர்மன் எல்லைகளுடன் உள்ள சிறிய ஜெர்மனிய மொழியினர் வாழும் பிரதேசம்.

புதிய திட்டப் பிரகாரம் வாலொனியா. பிளண்டாஸ் பகுதியினர் மேலும் கூடிய கலாச்சார, பொருளாதார சுய நிர்வாக உரிமை பெறுவடன், தலைநகரப் பிரதேசத்திலும் சம குடியேற்ற வாய்ப்பு பெறவுள்ளனர். இத்துடன் சிறுபான்மை மொழியினராகிய ஜெர்மனியருக்கும் நாடு முழுவதும் மொழியுரிமை பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இப் புதிய திருப்பத்தை உண்டாக்கிய வரலாறு பெல்ஜிய நாட்டு சரித்திரத்தில் மிக ஆழமாக வேரூன்றிவிட்ட ஒன்று.

இரண்டாம் உலகப் போர் வரையுள்ள நூற்றாண்டுகளாக பிரான்ஸ் மொழியினரால் ஆதிக்கப்பட்டு வந்த பெல்ஜியம், அவர்களின் கையிலேயே நாட்டின் பொருளாதார காரணிகளையும் கொடுத்து வந்திருந்தது. ஆனால் உலகப் போருக்குப் பின்னர் மிகவேகமாக பெருகிய பிளமிஸ் மக்கள் தொகையும், கடந்த பத்தாண்டுகளில், அந்நிய நாட்டு மூலதனங்களால், பிளமிஸ் பகுதியில் ஏற்பட்ட துரித கைத்தொழில், பொருளாதார வளர்ச்சியும், பிரான்ஸ் மொழினரை பின்தங்க வைத்துள்ளது.

இச் சூழ்நிலைகளில் இரு பெரும் இனத்தவர்களின் கட்சிகளான வொல்க்ஸ்யூன் [Volksunie] பிரான்ஸ்கோபன் முன்னணியும், சமஷ்டி முறையை கொள்கைகளாக வலியுறுத்தி, மக்களிடம் செல்வாக்கையும் பெற்று, தேர்தல்களில் வென்று வந்தனர். இதன் பலன் இன்று அரும்ப தொடங்கியுள்ளது.

இன்னும் ஆறு வருடகால அவகாசத்தில் தன் திட்டங்களை, நிறைவேற்றமக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளார் பிரதமர் கஸ்டன் எய்ஸ்கன்ஸ்'

பிரஸ்ஸல்ஸ் நகரை, தர் பிரதேசசபையாக மாற்றவும் ஓர் தேசிய அரசாங்கம் அமைத்து இரு பெரும் இனத்தவர்க்கும் சரி சம உரிமை அளிக்கவும் உறுதி கூறியுள்ளார் பிரதமர்.

இத்திட்டத்தை மொழி வேறுபாட்டால் சண்டையிட்டு களைத்துள்ள நாட்டு மக்கள் யாவரும் மனதார வரவேற்றுள்ளதுடன் நாட்டை ஓர் முழு சமஷ்டி அமைப்புக்கு கொண்டுவர தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்கவுள்ளனர்.

ஐரோப்பாவில் ஏழாவது சமஷ்டி நாடாக மிளிரப் போகும் தகைமையை பெல்ஜியம் இன்று பெற்றுள்ளது. இப்பொழுது சுவிற்சர்லாந்து, அஸ்திரியா, ஜெர்மன் சமஷ்டி குடியரசு, யுகோஸலாவியா, செக்கோஸலாவாக்கிய, சோவியத் ரஷ்யா (கடைசி மூன்றும் கம்யூனிஸ் நாடுகள்) ஆகிய நாடுகள் சமஷ்டி நாடுகளாக இயங்குகின்றன.

நன்றி:
(கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர்—24-2-1970)

## 'வள்ளுவருக்கும் ஏனைய கவிஞர்களுக்கும் வேறுபாடு என்ன?'

''கவிதைகள் வேலையில்லாதவர்கள் செய்யும் விளையாட்டு என்றும் கவிஞர்கள் கற்பனை உலகில் இருப்பவர்கள் புளுகுவதுதான் அவர்களின் கற்பனை என்றும் சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். சாதாரண மனிதனின் அறிவிற்கு அப்பாற்பட்டு, சறடு போன்ற பல உண்மைத் தொடர்புகளை மக்களுக்கு உதவுபவர்கள் கவிஞர்கள், அவர்களில் முன்னணியில் உள்ளவர் வள்ளுவப்பெருந்தகை''

இவ்வாறு நேற்று மாலை கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வர ஆலயத்தில் நடைபெற்ற வைகாசி அனுச வள்ளுவர் விழாவிற்குத் தலைமைவகித்துப்பேசிய புலவர் வித்துவான் இ, சி; சோதிநாதன் தமதுரையில் குறிப்பிட்டார்.

ஏராளமான மக்கள் கலந்துகொண்ட இவ்விழா வட கொழும்பு இந்து பரிபாலன சபை ஆதரவில் நடைபெற்றது.

திரு. ஆ. க. சுப்பிரமணியம் திரு. க. சி. சண்முகம் ஆகியோரும் பேசினர்.

பூசை, கூட்டுவழிபாடு, இன்னிசைக்கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் விழாவினைச் சிறப்பித்தன.

### ஆண்டவனே எங்களு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சில நூறு வாக்குகளால் நல்லூரில் நான் வெற்றி வாய்ப்பை இழக்கநேரிட்டுவிட்டது, எனது தோல்வி குறித்து நான் கவலைப்படவில்லை. நான் கவலைப்படுவதெல்லாம் தமிழினத்தின் எதிர்கால வாழ்வைப் பற்றித்தான்.

தேர்தல் தோல்வி எனக்கு என்றும் புதியவை அல்ல. பலமுறை தோல்விகளைச் சந்தித்திருக்கிறேன் ஆனால் அதற்காக நான் சோர்ந்து போனது கிடையாது.

இனத்தின் விடுதலைக்கு—தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு போராடும் எனக்கு பாராளுமன்றப் பதவி ஒரு பொருட்டல்ல நான் பாராளுமன்றத்துக்கு சென்றால் தமிழினத்துக்காக எப்படிப் போராடுவேனோ அதைவிட இன்னும் மூர்த்தன்யமாக சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வெளியில் நின்றே போராடப்போகிறேன்.

தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமே எனது மூச்சு: அதற்காக என் உடலில் உயிர் உள்ளளவும் போராடத்தான் போகிறேன். என் வியர்வையும் கண்ணீரும் இரத்தமும் இனத்தின் உரிமைப் போராட்டத்திலேயே செலவிடப்படும். இதைத்தான் நல்லூர்த் தொகுதி மக்களுக்கும் நாட்டுக்கும் எனது செய்தியாக கூறவிரும்புகிறேன்''.

### காப்புறுதிக் கூட்டுத்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் விண்ணப்பப் பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று சட்டம் கூறும்போது ஏன் அதற்கான ஒரு ஊழியரை நியமிக்கவில்லை.

இப்படியெல்லாம் பொது மக்கள் வினவுகின்றார்கள்.

கடவுள் வரம் தந்தாலும் பூசாரி அனுமதிக்காத இந்த இரட்டடிப்பு வேலை ஏன் நிகழ்கிறது.

எனவே இக் குறையை நிவர்த்தி செய்து காப்புறுதிக் கூட்டுத் தாபனம் உடனடியாகத் தமிழ்ப் பத்திரங்களையும் வழங்க நடவடிக்கை எடுக்குமா?

## எடுப்பார்கள், எம் வெற்றி கண்டால் ஓட்டம்

எள்ளிநகை யாடுகின்ற கயவர்கூட்டம்
எடுப்பார்கள் எம்வெற்றி கண்டால் ஓட்டம்
குள்ளநரிக் கும்பல்களின் வாய்ச்சொல்வீரம்
குறுக்குவழி நோக்கியது போகும் நேரம்
மெள்ள மெள்ளத் தோல்வியது தழுவிக்கொண்டார்
மெதுவாகத் தலைகளெலாம் குனிந்தேபோச்சு!
கள்ளமில்லா எம்கட்சி முன்னேசெல்ல
கருணையற்ற கட்சியெல்லாம் தோற்றேபோச்சு!

கடமையொடு கண்ணியமும் கட்டுப்பாடும்
காணுகின்ற மூவர்ணக் கொடியாலோங்கும்
மடமைதனை வேரறுத்து, மக்கள் தொண்டே
மாநிலத்தில் பெருந்தொண்டாய்ப் பேணிக்காத்து
படமெடுத்து ஆடுகின்ற நச்சுப்பாம்பைப்
பல்லாலே கொல்லுகின்ற கீரிபோல
திடமுடனே எம்வீரர் துணிந்துவிட்டார்
திக்கெட்டும் எமதுமொழிப் பெருமைவாழும்.

சுதந்திரமே பெறுதற்காய் மகாத்மாகாந்தி
சோர்வின்றிச் சிறைதன்னை அனுபவித்தார்
அதம்செய்யும் சிங்களவர் கொடுமைபோக்க
அமைதியுடன் சிறை சென்றார் எமது மக்கள்
விதம்விதமாய்ப் பேசிடுவர் மறுறையோர்கள்
வேண்டியது என்னவென்று தெரியாதோராய்க்
கதறிடுவார் தமிழுக்குப் பயனே இல்லை
காலமெலாம் மூவர்ணக் கொடியேஓங்கும்.

அல்வாயூர் மு. செ. விவேகானந்தன்

### நீதி தேவனே நீயே சொல்...!

# அண்ணன் இழைத்த குற்றம் தான் என்ன?

வட்டுக்கோட்டைத் தொகுதியே! நீ என்ன காரியம் செய்துவிட்டாய்?

இந்த நாட்டுத் தமிழ் மக்கள் அனைவரும் உள்ளம் நெகிழ்ந்து கண்ணீர் சிந்துவது உனது கண்களுக்குத் தெரியவில்லையா?

எங்கள் அண்ணன் அமிர்தலிங்கத்துக்கு இந்த நிலையா என்று இலட்சக்கணக்கான இளைஞர்கள் குமுறும் உள்ளங்களுடன் கொதித்துக் கிடப்பது உனது செவிகளில் விழவில்லையா?

எங்கள் வீரத் தளபதியை விடுதலைப்படையின் முன்னேடியை—விவேகமற்று வீணர்கள் சொற் கேட்டு வீழ்த்தி விட்டாயே! நீ எத்தனை பெரிய துரோகத்தை இனத்துக்கு செய்துவிட்டாய்!

பாராளுமன்றத்தில் எதிரிகள் நடுநடுங்க தமிழர் நிலைதனை தன் வெண்கலக்குரலில் எடுத்து முழக்குவானே அண்ணன். அதை தடுத்து விட்டாயே!

அண்ணன் உனக்கு என்ன தீங்கு செய்தான்?

அண்ணனை எங்களுக்குத் தந்ததும் நீ தானே! பின்னர் இப்போது ஏன் அவனைப் பின்னுக்கு தள்ளிவிட்டு எம் இதயங்களை வேலால் குத்தியிருக்கிருய்!

அண்ணன் அமிர்தலிங்கம் செய்த குற்றம்தான் என்ன?

தன் இளமைக்காலம் முழுவதையும் தமிழுக்காக, தமிழினத்துக்காக—தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்து வருகிருனே அதுதான் அவன் செய்த குற்றமா?

தன் நேரம், நினைப்பு, சக்தி, உழைப்பு அவ்வளவையும் தமிழ் தமிழ் என்று தமிழுக்காகவே செலவளிக்கிருனே அதுதான் அவன் செய்த குற்றமா?

அன்று 1956ம் ஆண்டு ஜூன் 5ந் திகதி காலிமுகக் கடற்கரையில்—வீட்டில் தன் அருமை மனைவி பிரசவ வேதனையில் துடித்துக்கிடக்க—நாடு காக்க, நமது இனத்தின் மானம்காக்க—தங்கத் தமிழ்காக்க— அறப்போரில் ஈடுபட்டு சிங்களக் காடையரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு காலி முகப் பசும் புற்றரையில் தனது பச்சை இரத்தத்தால் தமிழினத்தின விடுதலைக் காவியத்தை வரைந்தானே...... அதுதான் அவன் செய்த குற்றமா?

பெருகிவந்த இரத்தத்தை துடைத்தபடி இன்பத் தமிழுக்கு ஆபத்து என்ருல் இன்னுயிரைப் போக்கிடவும் தயங்கேன் என்று பாராளுமன்றத்தில் அன்று முழக்கமிட்டானே...... அதுதான் அவன் செய்த குற்றமா?

செந் தமிழுக்குற்ற துயர் துடைக்க சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் முன்னணியில் நின்று சிறை சென்று மீண்டானே...... அதுதான் அவன் செய்த குற்றமா?

தமிழினத்துக்காக தன் அருமைக் குடும்பத்தை—உறவினரை — நண்பர்களை யெல்லாம் பிரிந்து—சிங்கள ஆட்சியின் சிறைக் கூடத்தில் வாடினுனே பல மாதங்களாக.

இதுதான் அவன் செய்த குற்றமா?

தமிழினத்தின் விடுதலைக்காக—தமிழ்தாயின் அடிமை விலங்கொடிக்க சிங்கள அமைச்சர்களின் வருகையைப் பகிஷ்கரித்து கறுப்புக் கொடி பிடித்து பல ஆர்ப்பாட்டங்களை நடத்தி பொலீசாரிடம் அடி உதைபட்டானே...அதுதான் அவன் செய்த குற்றமா?



1961ம் ஆண்டு சிறிமா ஆட்சியையே கிடுகிடுக்க வைக்கும் மாபெரும் அறப்போரை இரு மாதங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்தி சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைகலங்கச் செய்தானே தளபதி... அதுதான் அவன் செய்த குற்றமா?

சிங்கள ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியான யாழ் அரசாங்க அதிபரின் ஜீப்புக்கு முன்னுல் அன்று பாய்ந்து சென்று படுத்து தமிழர் போராட்டத்தின் வைராக்கியத்தை நிலைநிறுத்தி—தமிழன் மானத்தை காப்பாற்றினுனே ... அதுதான்அவன் செய்தகுற்றமா?

தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்படும வேளைகளில் எல்லாம் எரிமலையாக குமுறி எழுந்து கர்ச்சனை புரிந்து இளைஞர்களைத் தட்டியெழுப்பி களத்தில் குதித்தானே...அதுதான் அவன் செய்த குற்றமா?

தூங்கிக் கிடந்த இளைய சமுதாயத்தை தன் வீர உரைகளால் தட்டியெழுப்பி விடுதலைப்பாதையில் அழைத்துச் செல்கிருனே... அது அவன் செய்யும் குற்றமா?

தமிழ், தமிழன், தமிழ் நாடு—என்றே ஒவ்வொரு மூச்சையும் விட்டு வருகிருனே...அதுதான் அவன் செய்யும் குற்றமா?

ஈழத் தமிழகத்தின் இளைய தலைவனுக—தன்மானத்தின் உறைவிடமாக வருங்காலத் தமிழகத்தின் புதுமைச் சிற்பியாக அண்ணன் விளங்குகிருனே...அதுதான் அவன் செய்த குற்றமா?

இந்நாடு முழுவதும் வட்டுக்கோட்டைத் தொகுதியின் உறுப்பினர் என்ன சொல்கிருர் என்பதை வாயைப்பிளந்தபடி எதிர்நோக்கியிருக்கச்செய்து வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களுக்கே உயர்ந்த இடத்தைப்பெற்றுத்தந்தானேஇதுதான் அவன் செய்த குற்றமா?

அண்ணன் மட்டுமா...? அண்ணனுடன் இணைந்து அவருடைய அருமை மனைவி அண்ணி மங்கையர்க்கரசியும் தமிழினத்துக்காக தன் இளமை வாழ்வை திாகப் பலிபீடத்தில் காணிக்கையாக்கியிருக்கிருரே...இதுதான் அவர்கள் செய்த குற்றமா?

தன் பிஞ்சுச் செல்வங்களை—மழலைமாருத பச்சிளம்பாலகர்களைப் பிரிந்து தனிமைச் சிறையில் வாடினுர்களே அண்ணனும் அண்ணியும்—இதுதான் அவர்கள் செய்த குற்றமா?

தமது தொகுதிக்குள் மட்டுமே சுற்றிக்கொண்டு இராமல்—தமிழினத்தின் நலம் பேண வடக்கு,கிழக்கிலுள்ள சகல தொகுதிகளையும் தமிழரசுக்கட்சி கைப்பற்ற வேண்டுமென்ற பேரார்வத்தால் கடமை உணர்ச்சியால்—ஈழத்தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சென்று கட்சிப் பிரசார வேலையில் ஈடுபட்டார்களே அது தான் அவர்கள் செய்த குற்றமா?

வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களே! கூறுங்கள்!



அண்ணன் அமிர்தலிங்கம் இழைத்த குற்றம் தான் என்ன?

அண்ணனின் வெற்றி வாய்ப்பை ஏன் பறித்தெடுத்தீர்கள்... எங்களை ஏன் கண் கலங்க வைத்தீர்கள்?

நாங்கள்தான் கலங்குகிறோம். ஆனுல் அண்ணன் கலங்கவில்லை. கடமையைச் செய்வோம் பலனை எதிர்பார்க்காமல்... என்றன்றே கூறுகிருன் அவன்—தேர்தல் முடிவைக் கேட்டபின்பும்!

எத்தனை பெரிய உள்ளம் அவனுக்கு!

அண்ணனின் அந்த விசாலமான உள்ளத்துக்கு நீங்கள் தரும் காணிக்கை இதுதானு?

தியாகராசா என்பவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்களே தியாகத்துக்கும் அவருக்கும் என்ன தொடர்பு?

அண்ணன் தமிழினத்துக்காக—செய்த—செய்துவரும் தியாகத்தின் கால் தூசி தியாகமாவது தியாகராசா செய்திருக்கிருரா? இனத்தைப் பற்றி- மொழியைப் பற்றி எப்போதாவது சிந்தித்திருக்கிருரா?

தியாகராசா ஒரு தொகுதிக்கு மட்டுமேயுரியவர்!

ஆனுல் பாராளுமன்றத்துக்கு போனுலும்சரி போகாவிட்டாலும் சரி அண்ணனே இந்நாட்டுத் தமிழினத்தின் தலைவன்; வீரத் தளபதி! அதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது!

காஞ்சியில் அறிஞர் அண்ணுவையும்தான் அங்குள்ள காங்கிரஸ் காரர்கள் தோற்கடித்தார்கள் ஒருமுறை, ஆனுல் அவரது வளர்ச்சியை அவர்களால் தடுக்க முடிந்ததா? அதேபோல இங்குள்ள காங்கிரஸ்காரர்களும் ஊரவன் பிரிவினை பேசி, ஏதேதோவெல்லாம் கொடுத்து அண்ணன் அமிர்தலிங்கத்தை தோற்கடித்துவிட்டார்கள்இன்று. ஆனுல் அண்ணனின் புகழை வளர்ச்சியை பெருமையை தடுத்திடமுடியுமா இவர்களால்?

அண்ணன் சுட்டுவிரலசைத்தால் அதற்கு கட்டுப்பட ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்கள் நாடு முழுவதும் காத்துக்கிடக்கிருர்கள்!

அண்ணன் ஆணையிட்டால், நாளை இந்த அரசாங்க இயந்திரத்தையே ஸ்தம்பிக்க வைக்கும் மாபெரும் அறப்போரில் குதிக்க தமிழர்கள் ஆயத்தமாக இருக்கிருர்கள்!

இத்தகைய சிங்கத்தை தேர்ந்தெடுத்து முழு இனத்தின் வாழ்த்துக்களைப்பெறும் பாக்கியத்தை இழந்துவிட்டீர்களே!

சிங்கத்தின் இடத்தில் சிறுநரியை உட்காரவைத்திருக்கிறீர்களே! சிறுநரி ஒருபோதுமே சிங்கமாக முடியாது!

சிறுநரி சிறுநரிதான். அந்தச் சிறுநரி தமிழினத்துக்கு இழைக்கவிருக்கும் கொடுமைகளை—துரோகங்களைப் போகப் போகப் பார்க்கப் போகிறீர்கள்!

அப்பொழுதுதான் நீங்கள் செய்த தவறுக்காக இரத்தக் கண்ணீர் வடிக்கப்போகிறீர்கள்! அப்போது எங்கள் அண்ணனின் அன்புக்கரங்கள் தாம் உங்கள் கண்ணீரைத் துடைக்க ஒடிவரப் போகின்றன!

அண்ணனை நீங்கள் தோற்கடித்திருக்கலாம். ஆனுல் அதற்காக மூலையில் ஒதுங்கியிருந்துவிடப்போகிறவரல்லர் அண்ணன்!

1952 பொதுத்தேர்தலில் அண்ணனைத் தோற்கடித்தீர்களே, அண்ணன் அத்துடன் ஒதுங்கியிருந்தானு? இல்லை!

ஏனெனில் பா. உ. பதவிகளை எதிர்பார்த்து தமிழினத்துக்கு தொண்டாற்ற வந்தவரல்ல அண்ணன். முழுமையான இன உணர்வால்—விடுதலை வெறியால்— தொண்டாற்றிவருபவர் அண்ணன்.

அண்ணனின் தோல்வி- அண்ணனுக்கு எவ்வகையிலும் தனிப்பட்ட தோல்வியேயல்ல—

அது இனத்தின் எழுச்சிக்கு இளைய தலைமுறைக்கு விடுதலை வெறிக்கு — இனத்தின் நலன்களுக்கு ஏற்பட்ட தோல்வியாகும்! தமிழனின் நன்றிகெட்ட தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்!

அண்ணன் அமிர்தலிங்கத்துக்கு நாடாளுமன்றப் பதவி கிட்டாமல் போனதையிட்டு நாங்கள் இப்போது கவலைப் படவில்லை!

ஏனெனில் நாடாளுமன்றப்பதவியைவிட மற்றோர் பெரிய பதவியில் அவர் எப்போதுமே உட்கார்ந்திருக்கிருர்.

அந்தப் பதவியிலிருந்து அண்ணனை இறக்க யாராலும் எப்போதும் முடியாது!

அதுதான் தமிழ் இளைஞர்களின் 'இதய சிம்மாசனம்' எனும் பெரும் பதவியாகும்!

—கோவை

## தமிழ் காக்கப் புறப்படும் படைக்குத் தலைமை தாங்கத் தயார்—

### தம்பலகாமம் கிராமச்சபை தலைவரின் வீரமுழக்கம்—

"நான் இந்த மேடையில் தோன்றியதும் இங்கு குழுமியிருக்கும் சகலருக்கும் பெரும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கும். நானும் ஒரு தமிழன் எனக்கும் தமிழ் பற்றுண்டு. சில தவருன சக்திகள் சில பிழையான எண்ணத்தை என் மனதில் ஏற்படுத்திய போதிலும் இங்கு பிரசன்னமாய் இருக்கும் சக கிராமசபைத் தலைவர்களையும் அவர்கள்கொண்டுள்ள தமிழ் பாசத்தையும் காணும் போதும் கேட்கும் போதும் என்னை அறியாமலே தமிழ்பாசம எனமனதில் வீறிட்டுக் கொண்டு வருகின்றது. எனவே என் அருமைச் சகோதரர்களே, வாலிபத் தோழர்களே தமிழன் முன்வைத்த காலைப் பின் வைக்க மாட்டான்—தமிழர் என்ருெரு இனம் உண்டு, தனியே அதற்கொரு குணம் உண்டு என்றுரைத்தார் பாரதியார். இப்பாடலுக்கொப்ப எமக்கொரு இனம் வேண்டும். அதற்கொரு தலைமையும் வேண்டும். இந்த இலட்சியத்தை அடைவதற்காக அல்லும் பகலும், பாராளுமன்றத்திற்குள்ளும் புறமும் போராடி வரும் ஒரே ஒரு கட்சி அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியே.

இந்தக் கட்சியுடன் சேர்ந்து உங்கள் படைக்குத் தலைமை தாங்கத் தயாராக உள்ளேன். எனவே வாலிபத் தோழர்களே பொறுத்தது போதும் பொங்கி யெழுங்கள்—

இவ்வாறு தம்பலகாமத்தில் நடைபெற்ற த. அ. க. கூட்டத்தில் பேசும் போது தம்பலகாமம் கிராமசபைத் தலைவர் திரு. மு. சண்முகலிங்கம் குறிப்பிட்டார்.

முன்னுள் கிராமச் சபைத் தலைவர் மு. சுப்பிரமணியம் அவர்களது தலைமையில் நடை பெற்ற இக் கூட்டத்திற்குப் பிரதம பேச்சாளராக கிளிநொச்சி வேட்பாளர் அடலேறு ஆலாலசுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினுர். மேற்படி கூட்டத்தில் மூதூர் பகுதி கிராமச் சபைத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தலைமை தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# சுதந்திரன்
## SUTANTIRAN

# சிறிமா பிரதமரானர்! புதிய அரசு ஜுன் 7 ல்
## தமிழ் எழுத்தாளர் நியமன அங்கத்தவர்?

(நமது நிருபர்)

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின் ஆட்சி நடாத்திய ஆறு அரசாங்கங்களில் 1965ல் ஆட்சியைக் கைப்பற்றிய டட்லியின் யூ. என். பி. அரசாங்கம் தான் 5 ஆண்டுகளும் முழுமையாக அதிகாரத்திலிருந்தது.

அவ்வதிகார அரசாங்கத்தை இந்த 7வது தேர்தலில் தென்னிலங்கை மக்கள் படுதோல்வியடையச் செய்திருக்கின்றனர்.

123 தொகுதிகளிற் போட்டியிட்ட யூ. என். பி. தான் மீண்டும் மீட்டுக்கொண்ட 17 தொகுதிகளிலும் மிகுந்த போராட்டத்தின் பின்னரே வெற்றிபெற்றிருக்கிறது.

இத்தோல்வியைத் தொடர்ந்து பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கடந்த 28ம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணியளவில் தனதும், தனது மந்திரி சபையினதும் இராஜினமாக் கடிதத்தைத் தமது அந்தரங்கக் காரியதரிசியான திரு. பிராட்மன் வீரகூன் மூலம் தேசாதிபதி வில்லியம் கோபல்லவாவிடம் கையளித்தார்.

இதை ஏற்றுக் கொண்ட தேசாதிபதி வெற்றியீட்டியுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவியான திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை வந்து பிரதமர் பதவியை ஏற்கும்படி அழைப்பு விடுத்தார்.

திருமதி சிறிமா 29ம் திகதி வெள்ளிக்கிழமை புதிய பிரதமராக விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

எதிர்வரும் ஜுன் 7ம்திகதி புதிய பாராளுமன்றம் கூடவிருக்கிறது. சிறிமாவின் தலைமையிலான புதிய பாராளுமன்றத்தை மகாதேசாதிபதி உத்தயோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

இப்பாராளுமன்றம் சுதந்திர ஈழத்தின 7வது பாராளுமன்றமாகும். புதிய மன்றத்தின் முதல் நடவடிக்கை புதிய அமைச்சர்களின் நியமனமாகும்.

இதுதவிர சம்பிரதாயமான 6 நியமன அங்கத்தவர்களும் இடம்பெறுவார்கள்.


அதில் தமிழர்களும் இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நியமன அங்கத்தவரில் ஒருவராகப் பிரபல எழுத்தாளரும், பேச்சாளருமான தீவிர இடதுசாரி முற்போக்காளருமான திரு. இரா. சிவலிங்கம் எம். ஏ. அவர்களும் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சிவலிங்கம் அவர்கள் முன்னுள் ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி அதிபர் என்பதும், அரசியல் காரணமாகப் பதவி துறந்து சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய பாராளுமன்றத்தில் தமிழர்கள் யாராவது இடம் பெறுவார்களா என்பது இன்னமும் புதிராகவே இருக்கின்றது.

சிறுபான்மை இனமக்கள் அனைவரும் இப்புதிய அரசாங்கத்திடம் ஏராளமான நியாயபூர்வ விடயங்களை எதிர்பார்க்கின்றனர் வன்பதுமட்டும் உண்மையாகும்.


பெருங்கருவன் පුහුණු කිරීමේ ආයතනය (ලංකා)
BANKERS' TRAINING INSTITUTE (CEYLON)

Name of Examination

Title of Paper

Index Number
(Write very clearly)

For Examiner's Use Only

| Question No. | Marks |
| --- | --- |

DIRECTIONS TO CANDIDATES

1. Write on both sides of the sheets.
2. Write on each page, in the margin provided, the number of the question as given in the question paper.

All rough work should be done in the Answer Book itself and crossed.

...books or the continuation sheets, used or unused, should not be removed ... Hall.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், திரு. கா. பொ. இரத்தினம், ஆகியோரது விடா முயற்சியினுலும் வங்கி ஊழியர் சங்கத்தின் நெருக்குதலினுலும் அண்மையில் வங்கிப் பயிற்சி நிலயத்தினர், வங்கிப் பயிற்சித் தேர்வுகளை முதன் முதலாக தமிழிழும் நடாத்தினர். ஆனுல் விடைத்தாளின் அட்டையில் தமிழ் முற்ருக புறக்கணிக்கப் பட்டிருந்தது. விபரங்கள் அனைத்தும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மாத்திரமே தரப்பட்டிருந்தன. இதனுல் தமிழ் மட்டும் தெரிந்த பரீட்சார்த்திகள் பெரும் அவதிக்குள்ளாயினர். வங்கியாளர் பயிற்சி நிலயத்தின் வகுப்புவாத இனவெறியை இது படம் பிடித்துக் காட்டுகிறதல்லவா? விடைத்தளின் 'போட்டோஸ்ராட்' படத்தைத்தான் மேலே பார்க்கிறீர்கள்!

## வெற்றி இழந்த தொகுதிகள்

தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் வடக்கிலும், கிழக்கிலுமாக ஆறு தொகுதிகளில் வெற்றி வாய்ப்புக்களை இழந்திருக்கின்றனர். கல்குடா தொகுதியைத் தவிர ஏனைய தொகுதிகளில் நூற்றுக்கணக்கான வாக்குகளாலேயே தோற்றிருக்கின்றனர்.

இந்த ஆறு தமிழரசு வாதிகளின் தோல்வியையும் தமிழரசுக் கட்சியும், வாலிப முன்னணியும் ஒரு தோல்வியாகவே ஏற்கத் தயாராயில்லை. ஏனெனில் தமிழரசுக் கட்சி பணம், பொருள் எதையுமே எதிர்பார்க்காமல் கொள்கையையும், இலட்சியங்களையும் மட்டுமே நம்பித் தேர்தலில் போட்டியிட்டது. எனவே தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் போடப்பட்ட ஒவ்வொரு வாக்கிற்கும் ஏராளமான பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது தமிழரசுக் கட்சியைத் தோல்வியுறச் செய்வதற்காக யூ. என் பி. அரசாங்கம் பணத்தை வாரி இறைத்தது. என்ருலும் தமிழரசுக் கட்சியை அடக்க அதனுல் முடியவில்லை. யூ.என். பி. தானே அழிந்துவிட்டது.

தமிழரசு வீரர்கள் வெற்றி வாய்ப்பை இழந்த தொகுதிகளின் விபரம் பின்வருமாறு:

### வட்டுக்கோட்டை

| | | |
| --- | --- | --- |
| ஏ. தியாகராஜா | (த. கா.) | 14359 |
| அ. அமிர்தலிங்கம் | (த. அ. க.) | 13634 |
| மேலதிகம் | | 725 |

### நல்லூர்

| | | |
| --- | --- | --- |
| ஈ. எம். வி. நாகநாதன் | (த. அ. க.) | 12508 |
| சி. அருளம்பலம் | (த. கா.) | 13116 |
| ஏ. இரத்தினம் | (சு) | 1593 |
| வி. சச்சிதானந்தம | (ல. ச. ச. க.) | 484 |
| சி. தனபாலசிங்கம் | (சு) | 223 |
| எஸ். ஸ்ரீநிவாசன் | (சு) | 113 |
| மேலதிகம் | | 608 |

### கிளிநொச்சி

| | | |
| --- | --- | --- |
| எம். ஆலாலசுந்தரம் | (த. அ. க.) | 8392 |
| வி. ஆனந்தசங்கரி | (த. கா.) | 9049 |
| கே. ஏ. ஜெரோம் | (சு) | 253 |
| ஏ. சிவசுந்தரம் | (சு) | 196 |
| கே. கனகரத்தினம் | (ல. ச. ச. க.) | 139 |
| மேலதிகம் | | 657 |

### பட்டிருப்பு

| | | |
| --- | --- | --- |
| எஸ். எம். இராசமாணிக்கம் | (த. அ. க.) | 12723 |
| எஸ். தம்பிராஜா | (ஐ. தே. க.) | 13370 |
| மேலதிகம் | | 647 |

### கல்முனை

| | | |
| --- | --- | --- |
| ஏ. உதுமாலெப்பை | (த. அ. க.) | 4960 |
| எம். சி. அகமது | (ஸ்ரீ ல. சு. க.) | 8779 |
| ஏ. ஆர். மன்சூர் | (ஐ. தே. க.) | 7827 |
| மேலதிகம் | | 952 |

### கல்குடா

| | | |
| --- | --- | --- |
| பி. மாணிக்கவாசகர் | (த. அ. க.) | 8420 |
| கே. டபிள்யூ. தேவநாயகம் | (ஐ. தே. க.) | 11205 |
| எஸ். சிவஞானம் | (சு) | 1660 |
| எஸ். எஸ். கபிரியேல் | (சு) | 557 |
| ஏ. எம். ஏ. கபூர் | (ஸ்ரீ. ல. சு. க.) | 331 |
| மேலதிகம் | | 2775 |

## சுதந்திரன் எழுத்தாளரை தாக்குவதற்கு முயற்சி!

(உடுவில் நிருபர்)

உடுவில் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு. சிவநேசனின் குத்துக்கரணங்களையும், அவரது கள்ளுமொந்தைக் கூலிப்பட்டாளங்களின் கோழைத்தனமான காடைத்தனங்களையும் சுதந்தினில் கட்டுரைகளாகவும், செய்திகளாகவும கண்டு கொதிப்படைந்த காங்கிரஸ் காடையர்கள் சுதந்திரனில் எழுதிவரும் ஒரு எழுத்தாளரைச் சந்தேகித்து அவரைத் தாக்க சதிசெய்து வருவதாகத் தெரிகிறது.

சுதந்திரனில் மேற்படி செய்திகளையும் கட்டுரைகளையும் படித்து எதிர்க்கவோ, மறுக்கவோ இயலாத கொள்கை இல்லாத காங்கிரஸ் காடையர்கள் எழுதியது இவராகத்தான் இருக்க வேண்டும் என குறித்த எழுத்தாளரை இதற்கு முன்பு வழிமறித்து எச்சரிக்கை செய்திருக்கிருர்கள். இவர்கள் அந்த எழுத்தாளரைப் பல முறை தாக்கத் திட்டம் தீட்டியபோது காங்கிரஸ் 'பெரியவர்கள்' தேர்தல் முடிந்தபின் உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள். சிவநேசன் தோற்ருல் உங்கள் எண்ணப்படியே எதையும் செய்யுங்கள் நாங்களும் தயார், இப்போது அவசரப்பட்டு எங்கள் தேர்தல் பொய்களில் மண்ணைத்தூவி விடாதீர்கள் என்று 'உபதேசம்' செய்ததாகத் தெரிகிறது. இப்போது திரு. தர்மலிங்கம் வெற்றியடைந்துவிட்டதால் காங்கிரஸ் கள்ளுமொந்தைகள் சுதந்திரன எழுத்தாளரைத் தாக்கக் கூடிய ஆபத்து இருக்கிறது.

நிரபராதியான அந்த எழுத்தாளரைக்காக்க அநீதியைச்சாட அறப்போர் புரியும் தமிழரசின் பங்கு என்னவோ?

## தமிழரசை எதிர்த்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகம், மாவட்ட சபை என்பனவற்றையெல்லாம் எதிர்த்த தனிப்பெருந் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் மூன்ரும் இடத்துக்குத் தள்ளபபட்டிருக்கின்ருர்.

தமிழரசிலிருந்து விலகிய வி. நவரத்தினம் அவர்கள் படுதோல்வியடைந்திருக்கிருர். ஊர்காவற்றுறையில் அவர் மூன்ருவது இடத்தைத்தான் பிடிக்க முடிந்திருக்கிறது. கா. பொ. இரத்தினம் அவர்கள் பெற்ற மேலதிக வாக்குகள் வி. நவரத்தினம் கட்சியினர் தாம் போட்டியிட்ட 4 தொகுதிகளில் பெற்றதைவிட அதிகமானதென்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் காங்கிரஸின் மூன்று முதலைகளையும் தமிழ்மக்கள் முற்ருக மண் கவ்வச் செய்திருக்கின்றனர். காங்கிரசின் ஆயுள்காலத் தலைவரான ஜி. ஜீ.யினதும் மாஜி அரைச் சபாநாயகர் மு. சிவசிதம்பரம் இருவருமே படுதோல்வியுற்றது இதைக் காட்டுகிறது.

இந்த மாபெரும் மாற்றங்கள் தமிழ்பேசும் இனம் மீண்டும் ஒரு புதிய மாற்றத்துக்குத் தமிழரசுக் கட்சியை எதிர்பார்ப்பதையே காட்டுகிறது.

## பண்டிதரின் வெற்றி 4 'சுயாட்சி'களைவிட அதிகம்!

'ஊர்காவற்றுறையில் போட்டியிட்டதனுல் சுயாட்சிக் கழகத் தலைவரான வி. நவரத்தினம் படுதோல்வியடைந்திருக்கிருர். அவரோடு சேர்ந்து அவரின் சகாக்கள் அத்தனை பேரையுமே வடபகுதி தமிழ் மக்கள் வேரோடு பிடுங்கி எறிந்திருக்கின்ருர்கள்.

அக்கட்சித் தலைவர் போட்டியிட்டதால் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் கூடுதலாகப் பெற்ற வாக்குகளைவிட சுயாட்சிக் கழக வேட்பாளர்கள் நால்வரும் சேர்ந்து எடுத்த வாக்குகள் குறைவு என்பதை அறிய அவர்களின் கட்சிக் கொள்கை முற்ருகவே புறக்கணிக்கப்பட்டிருப்பது தெரிகிறது,

ஊர்காவற்துறை (4752) நல்லூர் (1593) கோப்பாய் (983) பருத்தித்துறை (579) ஆகிய நான்கு தொகுதிகளிலுமாகச் சுயாட்சிக் கழகத்தினர் பெற்ற மொத்த வாக்குகள் 7907 தான்.

ஆனுல் ஊர்காவற்றுறையில் பண்டிதர் கா. பொ. இ மேலதிகாகப் பெற்ற வாக்குகள் 8066,

இந்த நால்வரும் இனி அரசியல் வனவாசம் செல்லார்களோ?

## வேதாளம் சொன்ன கதை

எதிர்வரும் 2-6-70 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கவிஞர் அம்பி எழுதிய 'வேதாளம் சொன்ன கதை' என்ற கவிதை நாடகம் அரங்கேற்றப்படவுள்ளது

இலங்கைக் கலைக்கழக நாடக வரிசையில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டுள்ள இந் நாடகத்தை 'நிழல்' நாடக மன்றத்தினர் மேடையேற்றுகின்ருர்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 30-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்,